செ.வெ.எண்:19 நாள்: 07.12.2017

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் படைவீரர் கொடி நாள் விழாவில் 35 முன்னாள் படைவீரர்/சார்ந்தோர்களுக்கு ரூ.5.57 லட்சம் மதிப்பிலான நிதி உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் வழங்கினார்.

-------------------------------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிமன்ற கூட்ட அரங்கில் முன்னாள் படை வீரர் நலத்துறையின் மூலம் படைவீரர் கொடி நாள் விழா .இன்று (07.12.2017) நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் கலந்து கொண்டு 35 முன்னாள் படை வீரர்கள்/ சார்ந்தோர்களுக்கு ரூ.5,57,435 மதிப்பிலான நலத்திட்ட நிதி உதவிகளை வழங்கினார்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:

முப்படைகளையும் சார்ந்த வீரர்கள் நாட்டின் எல்லைகள் பாதுகாப்பிற்கும் இயற்கை சிற்றங்களால் ஏற்படும் இன்னல்களில் இருந்து மக்களைகாப்பதிலும் உள்நாட்டு பாதுகாப்பிலும் ஆற்றி வரும் சேவை மகத்தானதாகும்.இவர்கள் சேவையை நினைவு கூறும் வகையில் டிசம்பர் 7ம் நாள் படை வீரர் கொடிநாள் கொண்டாடப்படுகிறது.முன்னாள் படைவீரர் நலத்திற்க்காவும் அவர்களின் குடும்பத்தினர் நலத்திற்காகவும் கொடிநாள் நிதி வசூல் செயய்ப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் 2016ம் ஆண்டில் படைவீரர் கொடிநாள் நிதிக்கு அரசு ரூ.49,22,500 இலக்கு நிர்ணயிக்கபட்டது. இலக்கையும் மிஞ்சும் வகையில் ரூ.94,80,000 வசூலிக்கப்பட்டு குறியீடு இலக்கு 192.58 விழுக்காடு எய்தப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாநகராட்சியில் ரூ.5,28,000 வசூலிக்கப்பட்டுள்ளது. 2016ம் ஆண்டில் 972 முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவர்களை சார்ந்தேர்களுக்கு ரூ.1.97 கோடி மதிப்பிலான நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் முன்னாள் படைவீரர்களுக்கு தனியாக குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்பட்டு குறைகள் தீர்த்து வைக்கப்படுகிறது.அலுவலர்கள் பணியாற்றி வரும் படைவீரர் மற்றும் முன்னாள் படைவீரர்களின் கோரிக்கைகளை தனி கவனத்துடன் பரிசீலித்து விரைந்து முடிக்க வேண்டும் என பேசினார்.

தொடர்ந்து முன்னாள் படைவீரர்கள் சார்ந்தோர்கள் மற்றும் அலுவலர்கள் தேனிர் விருந்து நிகழச்சியில் பங்கேற்றனர்.முன்னதாக மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகத்தில் கொடிநாள் நிதி வழங்கி கொடிநாள் வசூலை மாவட்ட ஆட்சியர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம்,சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ் இ.ஆ.ப, திருநெல்வேலி முப்படைவாரிய உபதலைவர் லெட் கர்ணல் செல்லபாண்டியன்,முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் திரு.ராஜேந்திரன்,கண்காணிப்பாளர் திரு.முருகன் மற்றும் அலுவலர்கள் முன்னாள் படைவீரர் சார்ந்தோர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்   திருநெல்வேலி